# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ      அதிவிசேஷமானது

අංක 2261/75 - 2022 ජනවාරි මස 07 වැනි සිකුරාදා - 2022.01.07

*2261/75 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I : தொகுதி (I) – பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

*அறிவித்தல்*

**செங்கல், ஓடு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச்சபை**

*செங்கல், ஓடு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச்சட்டத்தின் 29 (3) ஆம் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத் தீர்மானங்கள் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து பிரிவின் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

**எம். பி. டி. யு. கே. மாபா பதிரண,**
செயலாளர்,
*கைத்தொழில் அமைச்சு.*

*"மெஹெவரபியெச",*
*கைத்தொழில் அமைச்சு,*
*கொழும்பு 05.*
*2021, திசெம்பர் 30.*

**அட்டவணை**

*செங்கல், ஓடு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1961 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதிய 12617 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதிய 2108/35 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பினால் கடைசியாக வேறுபடுத்தப் பட்டவையுமான முடிவுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில், ஏற்கனவேயுள்ள பாகத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகத்தை இடுவதன் மூலம், மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.*

**பாகம் II**

*செங்கல், ஓடு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் வகுப்புக்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு நேர வேலைக்கு வழங்கப்பட வேண்டிய ஆகக் குறைந்த நாட் சம்பள அளவும் ஆகக்குறைந்த மாதச் சம்பள அளவும் கீழ்வருமாறு இருத்தல் வேண்டும்.*

**வேலையாளர் வகுப்பு**

**தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள், தரம் I**

*பதிப்பு இயந்திரத்திற்கு களிமண் ஊட்டுநர் (இயந்திரம்), சூளையில் (சூட்டடுப்பில்) வேலைபார்க்கும் தீவைப்போர்.*

**தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள், தரம் II**

*பதிப்பு இயந்திரத்திற்கு ஊட்டுவோர் (கையால்) களிமண் ஓடுகளை சுடுவதற்காகச் சூளையில் ஏற்றுவதில் அல்லது அடுக்குவதில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள்/தரம் பிரிப்போர்.*

**ஓரளவு தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள்**

*உருளை வேலையாளர், மொத்த உருவெட்டுநர், ஓட்டுத் தகட்டுக்கு எண்ணெய் பூசுவோர், அத்துடன் மெருகூட்டுவோர், நறுக்குவோர், காயாத ஓடுகளை தரம்பிரிப்போர், வாகனத்தில் ஏற்றிச் செல்வதற்காக ஓடுகளை அடுக்குவதில் ஈடுபட்டுள்ள வேலையாட்கள்.*

**தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள்**

*களிமண் கலப்பதிலும் பதமாக்குவதிலும் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், இழுவண்டியில் நிரப்புவோர், களிமண் வேலையாட்கள், மொத்த உருகாவுவோர், இயந்திர மூலமாகக் கலப்பதிலும் நீர் சேர்ப்பதிலும் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள் அடுக்குவரிசை அமைப்புக்களில் ஓடுகளை அடுக்குவதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், ஓடுகளை காயவைப்பதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், தரம் பிரிப்போருக்கு உதவுவதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், காயாத ஓடுகள் தரம் பிரிப்போருக்கு உதவுவதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், விறகு காவுவோர், நீர்விட்டுக் குழைக்கும் இயந்திரம் ஓட்டுநர், உலையிலிருந்து சுட்ட ஓடுகளை அகற்றுவதில் ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், அமுக்கு இயந்திரங்களுக்கு அல்லது களஞ்சியத்தின் ஏனைய பகுதிகளுக்கு களிமண் தொகுதிகளை எடுத்துச் செல்வதி ஈடுபட்டுள்ள வேலையாளர்கள், சுடுவதற்காகச் சூளைகளுக்குள் ஓடுகளை ஏற்றுவதிலும் அடுக்குவதிலும் ஈடுபட்டுள்ள உதவியாளர்கள்.*

**சாதாரண வேலை நாளொன்றிற்கான சம்பள விகிதங்கள்**

| நிரை I<br>வேலையாளர் வகுப்பு | நிரை II<br>ரூ. ச. |
|---|---|
| தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள், தரம் I | 638.00 |
| தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள், தரம் II | 604.00 |
| ஓரளவு தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் | 569.00 |
| தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் | 534.00 |

**ஒரு மாதத்திற்கான ஆகக்குறைந்த சம்பள விகிதம்**

| **வலையாளர் வகுப்பு** | **1 ஆம் ஆண்டு ரூ.ச.** | **2 ஆம் ஆண்டு ரூ.ச.** | **3 ஆம் ஆண்டு ரூ.ச.** | **4 ஆம் ஆண்டு ரூ.ச.** | **5 ஆம் ஆண்டு ரூ.ச.** |
|---|---|---|---|---|---|
| தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் தரம் I | 15,962.00 | 16,137.00 | 16,312.00 | 16,487.00 | 16,662.00 |
| தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் தரம் II | 15,094.00 | 15,244.00 | 15,394.00 | 15,544.00 | 15,694.00 |
| ஓரளவு தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் | 14,222.00 | 14,347.00 | 14,472.00 | 14,597.00 | 14,722.00 |
| ஓரளவு தேர்ச்சி பெற்ற வேலையாளர்கள் | 13,351.00 | 13,451.00 | 13,551.00 | 13,651.00 | 13,751.00 |

EOG 01 - 0079/1

---

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

அறிவித்தல்

**தெங்கு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச்சபை**

தெங்கு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச்சட்டத்தின் 29 (3) ஆம் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து பிரிவின் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**எம். பி. டி. யு. கே. மாபா பதிரண,**
செயலாளர்,
கைத்தொழில் அமைச்சு.

"மெஹெவரபியெச",
கைத்தொழில் அமைச்சு,
கொழும்பு 05.
2021, திசெம்பர் 30.

**அட்டவணை**

தெங்கு உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1949 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதிய 9971 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு, காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதிய 2108/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப் பட்டவாறானவுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ஆம் மற்றும் III ஆம் பாகங்களுக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகங்களை பதிலீடு செய்வதன் மூலம், மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**பாகம் II**

*சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் விவரிக்கப்பட்டுள்ள தெங்கு உற்பத்தித் தொழிலுக்குரிய நடவடிக்கைகளின் குறித்த சில செய்முறைகளுக்குப் பொருந்துவனவும் துண்டு வேலைக்குரியனவுமான கீழெல்லைச் சம்பள வீதங்கள் பின்வருமாறு :*

| **செய்முறைகள்** | | **விகிதம்** |
|---|---|---|
| *உலர்த்திய தேங்காய் பூ உற்பத்தி* | | *ரூ. ச.* |
| *தேங்காய் உரித்தல்* | *1000 காய்களுக்கு* | *541.00* |
| *சிரட்டைகளை அகற்றுதல்* | *1000 காய்களுக்கு* | *375.00* |
| *மேல் தோல் சீவுதல்* | *1000 காய்களுக்கு* | *375.00* |
| *தேங்காய்ப் பருப்பைக் கழுவுதலும் உடைத்தலும்* | *1000 இறாத்தலுக்கு* | *327.00* |
| *உலர்த்துதல் (சுயமாகவன்றி)* | *1000 இறாத்தலுக்கு* | *256.00* |
| *சிறு துண்டுகளாக்குதல் மூலம் உலர்த்தல்* | *1000 இறாத்தலுக்கு* | *345.00* |
| *சலித்தெடுக்கும் வகைப்படுத்தலும்* | | *290.00* |
| *அடைத்தலும் பெட்டிகளுக்கு அடையாளமிடுதலும்* | *120 - 130 இறாத்தல் வரையான பை ஒன்றிற்று* | *23.00* |

**குடிசைக் கைத்தொழிலாகவன்றி வேறு வகையில் தும்பு, கயிறு**
**ஆகிய உற்பத்தி செய்தல்**

| | | |
|---|---|---|
| | | *ரூ. ச.* |
| *மட்டை அடித்தல் (கிளர்த்திய பின் ஈர நிறை)* | *அந்தர் ஒன்றிற்கு* | *236.00* |
| *மட்டை களைப்பிரித்தலும் சுத்தப்படுத்தலும் (ஈரநிறை)* | *அந்தர் ஒன்றிற்கு* | *236.00* |
| *மெத்தைத்தும்பு சுத்தப்படுத்தலும் காயவைத்தலும் சிப்பமாக்குதலும் சிலிர்த்த தும்பைக்* | *அந்தர் ஒன்றிற்கு* | *236.00* |
| *கிளர்த்தலும், சிப்பமாக்குதலும்* | *அந்தர் ஒன்றிற்கு* | *192.00* |

*பாய்களின் உற்பத்தியும் பின்னலும் :*

| | | |
|---|---|---|
| *பாய்கள்* | *சதுர அடி ஒன்றிற்கு* | *232.00* |
| *பின்னல் பாய்கள்* | *சதுர யார் ஒன்றிற்கு* | *211.00* |
| *சிலிர்த்த தும்பைச் சிக்குவாய்குதலும் கூட்டுதலும்* | *அந்தர் ஒன்றிற்கு* | *628.00* |

**பாகம் III**

**நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பளம்**

இதனோடுள்ள I ஆம் நிரலிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தொழிலாளர்களுக்கு சாதாரண வேலைநாளொன்றிற்கு ஏற்புடையதாகவுள்ள நேரவேலைக்கான ஆகக்குறைந்த சம்பள விகிதம், II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பிரிவில் தரப்பட்டுள்ள விகிதமாகும்.

| | நிரல் I<br>வேலையாளர் வகுப்பு | நிரல் II<br>விகிதம்<br>ரூ. ச. |
|---|---|---|
| 01. உலர்த்திய தேங்காய் உற்பத்தி செய்வதில் | கங்காணி ஒருவருக்கு | 595.00 |
| 02. தேங்காய் எண்ணெய் உற்பத்தி | வேலையாள் ஒருவருக்கு (ஆண் அல்லது பெண்) | 574.00 |
| 03. இழை உற்பத்திப் பொருட்களையும் தும்பு உற்பத்திப் பொருட்களையும் உற்பத்தி செய்வதில் | 18 வயதிற்குக் குறைந்த வேலையாளர் ஒருவருக்கு (ஆண் அல்லது பெண்) | 500.00 |
| 04. தும்பு, சிலிர்த்த தும்பு உற்பத்தி | கங்காணி ஒருவருக்கு | 500.00 |

EOG 01 - 0079/2

---

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

அறிவித்தல்

**பாதுகாப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச்சபை**

பாதுகாப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில் அமைச்சர் அவர்களாலல் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச்சட்டத்தின் 29 (3) ஆம் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து பிரிவின் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**எம். பி. டி. யு. கே. மாபா பதிரண**,
செயலாளர்,
கைத்தொழில் அமைச்சு.

“மெஹெவரபியெச”,
கைத்தொழில் அமைச்சு,
கொழும்பு 05.
2021, திசெம்பர் 30.

**அட்டவணை**

பாதுகாப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டடு, 1978 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் திகதிய 330 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு, காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவும், கடைசியாக 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதிய 2080/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலின் மூலம் வேறுபடுத்தப்பட்ட தீர்மானங்களின் பகுதி II ற்குப் பதிலாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம், மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

அ. தொழிற்பாட்டு ஆளணியினர் : - பாதுகாப்பு அலுவலர், பாதுகாப்பு காவலர், காவலாளர்கள், “பெடால்மன்” அல்லது எப்பெயர் கொண்டாயினும் அழைக்கப்படும் ஊழியர்கள்.

ஆ. மேற்பார்வை ஆளணியினர் : - தொழிற்பாட்டு ஆளணியினருக்குப் பொறுப்பாக உள்ள ஊழியர்கள், பொறுப்பு அலுவலர்கள், மாற்றுநேர மேற்பார்வையாளர்கள் அல்லது மேற்பார்வையாளர்கள்.

கீழ் குறிப்பிடப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைய நேர வேலைக்கான ஆகக்குறைந்த சம்பள வீதங்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள விகிதம்**

| **ஊழிய ஆண்டு** | **தொழிற்பாட்டு ஆளணியினர்** ரூ. ச. | **மேற்பார்வை ஆளணியினர்** ரூ. ச. |
|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 12,500.00 | 13,275.00 |
| 2 ஆம் ஆண்டு | 12,600.00 | 13,425.00 |
| 3 ஆம் ஆண்டு | 12,700.00 | 13,575.00 |
| 4 ஆம் ஆண்டு | 12,800.00 | 13,725.00 |
| 5 ஆம் ஆண்டு | 12,900.00 | 13,875.00 |
| 6 ஆம் ஆண்டு | 13,000.00 | 14,025.00 |
| 7 ஆம் ஆண்டு | 13,100.00 | 14,175.00 |
| 8 ஆம் ஆண்டு | 13,200.00 | 14,325.00 |
| 9 ஆம் ஆண்டு | 13,300.00 | 14,475.00 |
| 10 ஆம் ஆண்டு | 13,400.00 | 14,625.00 |
| 11 ஆம் ஆண்டு | 13,500.00 | 14,775.00 |
| 12 ஆம் ஆண்டு | 13,600.00 | 14,925.00 |
| 13 ஆம் ஆண்டு | 13,700.00 | 15,075.00 |
| 14 ஆம் ஆண்டு | 13,800.00 | 15,225.00 |
| 15 ஆம் ஆண்டு | 13,900.00 | 15,375.00 |
| 16 ஆம் ஆண்டு | 14,000.00 | 15,525.00 |
| 17 ஆம் ஆண்டு | 14,100.00 | 15,675.00 |
| 18 ஆம் ஆண்டு | 14,200.00 | 15,825.00 |
| 19 ஆம் ஆண்டு | 14,300.00 | 15,975.00 |
| 20 ஆம் ஆண்டு | 14,400.00 | 16,125.00 |
| 21 ஆம் ஆண்டு | 14,500.00 | 16,275.00 |
| 22 ஆம் ஆண்டு | 14,600.00 | 16,425.00 |
| 23 ஆம் ஆண்டு | 14,700.00 | 16,575.00 |
| 24 ஆம் ஆண்டு | 14,800.00 | 16,725.00 |
| 25 ஆம் ஆண்டு | 14,900.00 | 16,875.00 |
| 26 ஆம் ஆண்டு | 15,000.00 | 17,025.00 |

EOG 01 - 0079/3

---

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

அறிவித்தல்

**புடவை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச்சபை**

புடவை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் கௌரவ தொழில் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச்சட்டத்தின் 29 (3) ஆம் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆம் திகதியிலிருந்து பிரிவின் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**எம். பி. டி. யு. கே. மாபா பதிரண,**
செயலாளர்,
கைத்தொழில் அமைச்சு.

"மெஹெவரபியெச",
கைத்தொழில் அமைச்சு,
கொழும்பு 05.
2021, திசெம்பர் 30.

**அட்டவணை**

புடவை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1971 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 29 ஆந் திகதிய 14955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டவையும், காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டவையும், 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதிய 2080/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இறுதியாக மாற்றப்பட்டவையுமான முடிவுகள், அட்டவணையின் II ஆம் பகுதிக்காகப் பின்வரும் புதிய பகுதியினைப் பிரதியீடு செய்வதன் மூலம், மேலும் மாற்றப்படுதல் வேண்டும்.

**பாகம் II**

**வேலையாளர் வகுப்பு : 1 - 1**

**தரம் I (தேர்ச்சியுடையோர்) :**

வடிவமைப்போர், செதுக்குநர், புனைவுரு வேலைசெய்வோர் (நெய்தல்), முற்புற அளவாளர்கள், பொருத்துவோர், சிக்கெடுத்தல், விசைச்சட்டம் நூற்றுதல், நெசவிழைத்தல், சுற்றுதல், அளவுபடுத்தல், நெய்தல்.

**தலைமை வேலை செய்வோர்கள்**

விசைச் சட்டகம் நூற்றல், நெய்தல்

**வேலை செய்வோர்கள்**

மெருகூட்டுதல், அளவு படுத்தல், வாருதல். சிக்கெடுத்தல்

**நூலிழை வேலை செய்வோர்கள்**

நெய்தல்

**தரம் 11 (தேர்ச்சியுடையோர்)**

தறிக்கட்டைப் பரிசாரகர், வேலைசெய்வோர்கள்

குதம், அச்சிடுதல், சாயமூட்டுதல், வெளிறச் செய்தல், இரட்டித்தல், சுற்றுதல், நெசவிழைதல், உள்ளிழுத்தல், அத்துடன் ஊதலறை

**வேலை உதவியாளர்கள்**

சிக்கெடுத்தல்

**நூலிழை வேலை செய்வோர்கள்**

நூற்றல், விசைச் சட்டகம், தகர்ப்போர், நெசவாளர்

**ஓரளவு தேர்ச்சியுள்ளவர்கள்**

*மூடையாளர் (கட்டுதலும் மூடையாக்குதலும்), சுற்றிக்கட்டுநர், பொதிகட்டுநர், பெட்டி போடுநர், தச்சர், இரசாயனவியலாளர், குளிரூட்டு பொறி தொகுதியாளர், எண்ணுவோர்.*

**நூல் வெட்டுவோர்**

*உருளி, கூடைப்பையன்கள் (சுற்றுதல்), வெட்டுநர்*

**அட்டை**

*அட்டை வெட்டல் மேற்பார்வையாளர்/தலைமை வெட்டல் மேற்பார்வையாளர், கழற்றுநர் இரட்டிப்பாக்குநர், உள்ளிழுக்குநர்*

**நூல்**

*முறுக்கிழை, காயவைத்தல், அடுக்கு வரிசையாளர், சாயமூட்டுநர், மூடையிடுநர், வேகச்சுழற்றி*

**அளவிடுநர்**

*நூற்புக்கதிர், பரிசோதகர்கள், முதற்துண்டுத் துணி பொருத்துநர், உதவி அரைப்பாளர்கள், தட்டை அட்டை நீர் பிழிவாளர்கள்*

**வேலை செய்வோர் சுழற்றுதல்**

*வகை பிரிப்போர், கண்காணிமார், வெள்ளாவி வைக்குநர், எந்திரக் கவனிப்பாளர்கள், குழாயமைப்பு சுற்றுநாடா எந்திரவியலாளர், மூடுவோர்.*

**எந்திர ஆண்கள்**
*எந்திரம் வாருதல், வெட்டுதல் மற்றும் கத்தரித்தல், திணித்தல், அச்சிடுதல், ரிப்பன் மடித்தல் சில்வர் மடித்தல், சவர்க்காரமிடல்*

**எந்திரப் பெண்கள்**

*கட்டில் விரிப்பு*

**கார உப்பிடுவோர், கலக்குநர்**
*நிறம், அளவு*

**எட்டுநர், உருட்டுநர், பழுதுபார்ப்போர்**

*வாரும் ஊசி, நீள் பட்டை, தார்முள் மற்றும் அழுத்துக்கட்டை நுற்புக்கதிர், நெசவுத்தறி நாடாநாக்கு, மாதிரி பார்க்குநர், மடிப்புக்கடையிடுநர், திரையாக்குநர், திரையச்சிடுநர், அடுக்குநர்*

**அட்டை**

*தையற்காரர், நுனிபொசுக்கும்நரும் வடிவமைப்பாளரும் அளவாளர்கள் பின்புறம், அழுத்துக்கடை ஆக்குநர்,*

**நூற்போர்**

*நூல் நூற்கும் எந்திரவளையம் மதிப்பிடுதல், தைப்போர், தைப்போர் நாடா, தையல் பொறி அட்டை, இடையீடு வரைதல், சிம்பலெக்ஸ், கம்பளிப் புரியிழைவாக்கம், கழிவு அட்டை.*

**பெருந்தொட்டியாளர்**
*நூற்கழி வெளிறவைத்தல், பருத்தி சாயமூட்டுதல், நூற்கழி சாயமூட்டுதல்*

**சுற்றுவோர்**
*தன்னியக்க பேர்ண் சாம்பல் நிறம், நூல்சுற்று கூம்பு, இரட்டிப்பாக்கி, யூனிவர்சல் பேர்ண், சுற்றுறையிடு பையன்கள் (நூற்றல்)*

**தேர்ச்சியற்றவர்கள்**

பின்புற நிரப்புநர், மூடையிடுநர் (குதம்), மூட்டை அடையாளமிடுவோர், மூடையிடுதல் சரிபார்ப்போர், பற்றி நிரப்புநர், காவுநர் - தறிக்கட்டை நூல்வெட்டு, பருத்தி சுழற்றுகை, சுழல் வட்டத்தகடு, கணிப்புப்பலகை.

**துப்பரவாக்குநர்கள்**

அறை, அழுத்துக்கட்டை துணி குவிப்போர், கூடைப்பையன்கள் (கம்பள விரிப்பு பிரிவு) வெட்டுநர் வளையல்

**மடிப்புகள் சேர்ப்போர், மடிக்குநர்**

கிறீஸ், கை

**உதவியாளர், தொழிலாளர்கள், எந்திரவியலாளர்**

பரத்தி விதையகற்றல், பஞ்ச வெட்டும் பொறி கலத்தல், கழுவுதல்
இலக்கம் அடையாளமிடுவோர், வேலையாளர்கள், எண்ணெயிடுநர், பொதி செய்வோர்கள்

**கழிவு எடுப்போர்கள், தகடு இடுவோர்கள்**

முன்புறம்/பின்புறம்
உருளை மூடுநர் உதவியாளர், சிம்பு கழிவு திறப்போர் விதை சேகரிப்போரும் பொதி செய்வோரும்

**கவ்வுகோல் பழுதுபார்ப்போர்**

அழுத்துக்கட்டை ஆக்குநர் - உதவியாளர்கள்

**உதவியாளர்**

முத்திரையிடுவோரும், பை - பட்டி, உரிப்போர், சணல்கோதுவோர், பொருக்குநர், நூல்பிரித்தெடுப்போர் நிறையிடுவோர்/தராசு ஆட்கள் பேர்ண சுற்றுநர் (கம்பளவிரிப்புப் பிரிவு) நூலிழை பதப்படுத்துவோரும் விநியோகிப்போரும்.

**மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள விகிதம்**

| ஊழிய ஆண்டு | தேர்ச்சி அற்றோர் | ஓரளவு தேர்ச்சி உடையோர் | தேர்ச்சி உடையோர் தரம் II | தேர்ச்சி உடையோர் தரம் I |
|---|---|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 1 ஆம் ஆண்டு | 12,500.00 | 13,025.00 | 13,550.00 | 14,075.00 |
| 2 ஆம் ஆண்டு | 12,600.00 | 13,150.00 | 13,700.00 | 14,250.00 |
| 3 ஆம் ஆண்டு | 12,700.00 | 13,275.00 | 13,850.00 | 14,425.00 |
| 4 ஆம் ஆண்டு | 12,800.00 | 13,400.00 | 14,000.00 | 14,600.00 |
| 5 ஆம் ஆண்டு | 12,900.00 | 13,525.00 | 14,150.00 | 14,775.00 |
| 6 ஆம் ஆண்டு | 13,000.00 | 13,650.00 | 14,300.00 | 14,950.00 |
| 7 ஆம் ஆண்டு | 13,100.00 | 13,775.00 | 14,450.00 | 15,125.00 |
| 8 ஆம் ஆண்டு | 13,200.00 | 13,900.00 | 14,600.00 | 15,300.00 |
| 9 ஆம் ஆண்டு | 13,200.00 | 14,025.00 | 14,750.00 | 15,475.00 |
| 10 ஆம் ஆண்டு | 13,400.00 | 14,150.00 | 14,900.00 | 15,650.00 |

EOG 01 - 0079/4

---

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

அறிவித்தல்

## இறப்பர் (தயர், தியூப் உற்பத்தி, தயர் மீள் நிரப்புதல் உட்பட) பிளாஸ்திக், பெற்றோலியம் றெசின் பொருட்கள் உற்பத்தித் தொழில்

இறப்பர் (தயர், தியூப் உற்பத்தி, தயர் மீள் நிரப்புதல் உட்பட) பிளாஸ்திக், பெற்றோலியம் றெசின் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**எம். பி. டி. யு. கே. மாபா பதிரண,**
செயலாளர்,
கைத்தொழில் அமைச்சு.

"மெஹெவரபியெச",
கைத்தொழில் அமைச்சு,
கொழும்பு 05.
2021, திசெம்பர் 30.

**அட்டவணை**

இறப்பர் (தயர், தியூப் உற்பத்தி, தயர் மீள் நிரப்புதல் உட்பட) பிளாஸ்திக், பெற்றோலியம் றெசின் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 14831 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு,

காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதிய 2080/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டதுமான தீர்மானங்கள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில் "மாதமொன்றுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த சம்பள அளவு" என்னும் தலையங்கத்தின் கீழ் காணப்படும் பகுதிக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பகுதியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**II ஆம் பாகம்**

**மாதமொன்றுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த சம்பள விகிதங்கள்**

| ஊழிய ஆண்டு | தேர்ச்சியற்றோர் ரூ.ச. | ஓரளவு தேர்ச்சியுடையோர் ரூ.ச. | தேர்ச்சிபெற்றோர் ரூ.ச. | தொழிற் பயிற்சி பெறுவோர் தொழில் பயிலுநர் ரூ.ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 12,500.00 | 13,006.25 | 13,512.50 | 8,750.00 |
| 2 ஆம் ஆண்டு | 12,600.00 | 13,131.25 | 13,662.50 | 8,950.00 |
| 3 ஆம் ஆண்டு | 12,700.00 | 13,256.25 | 13,812.50 | 9,150.00 |
| 4 ஆம் ஆண்டு | 12,800.00 | 13,381.25 | 13,962.50 | 9,350.00 |
| 5 ஆம் ஆண்டு | 12,900.00 | 13,506.25 | 14,112.50 | |
| 6 ஆம் ஆண்டு | 13,000.00 | 13,631.25 | 14,262.50 | |
| 7 ஆம் ஆண்டு | 13,100.00 | 13,756.25 | 14,412.50 | |
| 8 ஆம் ஆண்டு | 13,200.00 | 13,881.25 | 14,562.50 | |
| 9 ஆம் ஆண்டு | 13,300.00 | 14,006.25 | 14,712.50 | |
| 10 ஆம் ஆண்டு | 13,400.00 | 14,131.25 | 14,862.50 | |
| 11 ஆம் ஆண்டு | 13,500.00 | 14,256.25 | 15,012.50 | |
| 12 ஆம் ஆண்டு | 13,600.00 | 14,381.25 | 15,162.50 | |
| 13 ஆம் ஆண்டு | 13,700.00 | 14,506.25 | 15,312.50 | |
| 14 ஆம் ஆண்டு | 13,800.00 | 14,631.25 | 15,462.50 | |
| 15 ஆம் ஆண்டு | 13,900.00 | 14,756.25 | 15,612.50 | |
| 16 ஆம் ஆண்டு | 14,000.00 | 14,881.25 | 15,762.50 | |
| 17 ஆம் ஆண்டு | 14,100.00 | 15,006.25 | 15,912.50 | |
| 18 ஆம் ஆண்டு | 14,200.00 | 15,131.25 | 16,062.50 | |
| 19 ஆம் ஆண்டு | 14,300.00 | 15,256.25 | 16,212.50 | |
| 20 ஆம் ஆண்டு | 14,400.00 | 15,381.25 | 16,362.50 | |
| 21 ஆம் ஆண்டு | 14,500.00 | 15,506.25 | 16,512.50 | |
| 22 ஆம் ஆண்டு | 14,600.00 | 15,631.25 | 16,662.50 | |
| 23 ஆம் ஆண்டு | 14,700.00 | 15,756.25 | 16,812.50 | |
| 24 ஆம் ஆண்டு | 14,800.00 | 15,881.25 | 16,962.50 | |
| 25 ஆம் ஆண்டு | 14,900.00 | 16,006.25 | 17,112.50 | |

## சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்

அறிவித்தல்

### உணவுச் சாலைகள், உணவு வழங்கல் தொழில் தொடர்பான சம்பளச்சபை

*உணவுச் சாலைகள் உணவு வழங்கல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவென அக் கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இத் தீர்மானங்கள் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்க வருதல் வேண்டும்.*

**எம். பி. டி. யு. கே. மாபா பதிரண,**
செயலாளர்,
கைத்தொழில் அமைச்சு.

"மெஹெவரபியெச",
கைத்தொழில் அமைச்சு,
கொழும்பு 05.
2021, திசெம்பர் 30.

### அட்டவணை

*உணவுச் சாலைகள், உணவு வழங்குதற் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1979 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதியன்று வெளிவந்த 34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டு காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவாறாக 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதிய 2081/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமாகிய அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிப்பிட்டுள்ள முடிவுகள் மேலும் பின்வருமாறு வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.*

*உணவுச்சாலைகள், உணவு வழங்குதற் தொழிலுக்கான I ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள வேலையாளர்களுக்கு ஏற்புடையனவாகவுள்ள நேரவேலைக்கான ஆகக்குறைந்த சம்பள விகிதங்கள், II ஆம் பாகத்திலுள்ள நேரொத்த பதிவில் தரப்பட்டுள்ள விகிதங்களாயிருத்தல் வேண்டும்.*

### பாகம் I

**வேலையாளர்களின் வகுப்பு**

**தரம் I**

*உதவி அறைப் பையன்கள், தரிக்குமிடப் பரிசாரர், தரிக்குமிடப் பெண் உதவியாளர், படுக்கையறைத் தொழிலாளர்கள், சுத்தஞ்செய்வோர், ஓய்வறைத் தொழிலாளர்கள், படுக்கையறை (மலசலகூட)த் தொழிலாளர்கள், மலசலகூடத் தொழிலாளர்கள், அலுவலகப் பையன், அலுவலகத் தொழிலாளர்கள், பண்டகசாலைத் தொழிலாளார்கள், சைக்கிள் ஏவலாளர், சமையலறை சுத்தஞ் செய்வோர், சமையலறை உதவியாளர்கள், உண்கலம் கழுவுவோர், சமயலறைத் தொழிலாளர்கள், சுமையாள், போசனைப் பதார்த்தசாலைப் பையன், உதவியாளர், கோப்பை அறைப் பையன், குவளை அறைப் பையன், மதுபானசாலைத் தொழிலாளர், பயன்பணி வேலையாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள்/உதவியாளர்கள், தேர்ச்சியற்ற பராமரிப்புத் தொழிலாளர்கள்.*

**தரம் II**

*அறைப் பையன்கள், மனைப் பணியாட்கள், அறைப்பணிப்பெண், துணியறைப் பரிசாரர், அறைப்பெண் உதவியாளர், சேவகர்கள், தூதுப் பணியாட்கள். சரிபார்ப்போர், பணியறைப் பையன்கள், குற்றேவல் பையன், மின்தூக்கிப் பையன், வாயிலோன், பயணப்பொதி மின்தூக்கி இயக்குநர்கள், பயணிகள் மின்தூக்கி இயக்குநர்கள், உதவி உணவு பரிமாறுபவர், உதவி பண்டகசாலை மேலாள், பஸ்வண்டிப் பையன், உதவி மதுபானச் சாலையாளர், உதவி மதுபானச்சாலை பணியாளர், பிலியட்ஸ் மார்க்கர், நீச்சல்தடாக உயிர்க்காப்பாளர், சலவைச் சாலை உதவியாளர், தோட்டக் காரன், நீச்சல் தடாகப் பரிசாரர், ஓரளவு தேர்ச்சியுள்ள பராமரிப்புத் தொழிலாளர்.*

**தரம் III**

*தையற்பெண்கள் (சீமஸ்ட்ரெஸ்), தையற்காரர், உடம்புபிடிப்போர், எழுது வினைஞர் தரம் III, பண்டகசாலை உதவியாளர், சாரதிகள், மதுபானச் சாலைக் காசாளர்கள், சிட்டை எழுதுவினைஞர், பொது எழுதுவினைஞர், அந்தரங்க எழுதுவினைஞர், சிற்றுண்டிச்சாலைச் சமையற்காரர், தித்திப்புப் பண்டம் தயாரிப்பவர், உதவிச் சமையற்காரர், சமையலறை 3 ம் உதவியாளர், உதவி பாண் தயாரிப்பாளர், போசனைப் பதார்த்தசாலையாளர், சமையற்காரர் தரம் III, உதவி மணித் தலைமையாள், மண்டபச் சுமையாளர், உணவு பரிமாறுபவர், மதுபானச் சாலைப் பணியாளர், பண்டசாலைமேலாள், மதுபானச்சாலைப் பரிமாறுநர், மதுபான பண்டசாலை மேலாள், பாதுகாப்புக் காவலாளர், தலைமைத் தோட்டக்காரன், தேர்ச்சியுள்ள பராமரிப்புத் தொழிலாளர், மதுபானச்சாலையாளர்.*

**தரம்** IV

சுகாதாரக் களரி வரவேற்பாளர், எழுதுவினைஞர் தரம் II, உதவிப் பண்டசாலைப் பொறுப்பாளர், பண்டசாலை எழுதுவினைஞர், உதவி இரவுக் கணக்காய்வாளர், நேரம் குறிப்போர், காடெக்ஸ் உதவியாளர், கணக்கு எழுதுவினைஞர், உதவி கணக்கு பதியுநர், செலவின எழுதுவினைஞர், வரவு எழுதுவினைஞர், விற்பனைப் பேரேட்டு எழுதுவினைஞர், சம்பள எழுதுவினைஞர், தட்டெழுத்தாளர், காசாளர் பொது உதவியாளர், தனியாள் உதவியாளர், உதவித் தலைமைச் சமையற்காரர், சமையலறை 2ம் உதவியாளர், பாண் தயாரிப்பவர், பிரிவுத் தலைமைச் சமையற்காரர், சமையற்காரர் தரம் II, தொலைபேசி இயக்குநர், வரவேற்பாளர், மணித்தலைமையாள், தலைமைச் சுமையாள், அறைச்சேவைக் கட்டளை பெறுவோர், உணவு மேடைப் பணியாள், தலைமை மதுபானச்சாலைப் பணியாள், தலைமை மதுபானச்சாலைப் பொறுப்பாளர், தலைமை உணவு பரிமாறுபவர், தலைமைப் பண்டசாலை மேலாள், தலைமை விருந்தோம்பற் பெண், தலைமைப் போசனப் பதார்த்த சாலையாளர், தேநீர் தயாரிப்பவர், பாதுகாப்புத் தலைவர், சிரேஷ்ட சலவைச்சாலை உதவியாளர்.

**தரம்** V

நிலமேற்பார்வையாளர், துணியறை மேற்பார்வையாளர், தாதிமார், உதவி மனைப் பொறுப்பாளர், எழுதுவினைஞர் தரம் I, பண்டகசாலைப் பொறுப்பாளர், தலைமைக் கணக்கு எழுதுவினைஞர், சிறாப்பர், கணக்குப்பதிவாளர், இரவுக் கணக்காய்வாளர், வருமானக் கணக்காய்வாளர், சுருக்கெழுத்தாளர், பிரதான எழுதுவிளைஞர், பிரதான காசாளர், கணக்காய்வாளர், கொள்வனவு உதவியாளர், பிரதான நேரம் குறிப்பவர், சமயலறை மேலாள், மேற்பார்வையாளர், சமயலறை 1 ம் உதவியாளர், தலைமைச் சமையற்காரர், மேல்நிலை சமையற்காரர், உண்டிச்சாலைச் சமையற்காரர், முன்னறை அலுவலக எழுதுவிளைஞர், விமான நிலையப் பிரதிநிதி, தலைமை வரவேற்பாளர், பிரதான தொலைத் தட்டெழுத்து இயந்திர இயக்குநர், பிரதான தொ,லைபேசி இயக்குநர், ஒதுக்கீட்டு எழுதுவினைஞர், மேற்பார்வையாளர், குதிரையோட்டி முகாமையாளர், பாதுகாப்புப் பணிமுறை மாற்றத் தலைவர், தோட்ட மேற்பார்வையாளர், பொறியியல் பொறுப்புப் பணியாளர், நீச்சல் தடாக மேற்பார்வையாளர்கள்.

**அட்டவணை**

**விளக்க அட்டவணை** II

ஒரு மாதத்திற்கான கீழெல்லைச் சம்பள விகிதம்

| ஊழிய ஆண்டு | தரம் I ரூ.ச. | தரம் II ரூ.ச. | தரம் III ரூ.ச. | தரம் IV ரூ.ச. | தரம் V ரூ.ச. |
|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 12,500.00 | 13,025.00 | 13,550.00 | 14,075.00 | 14,600.00 |
| 2 ஆம் ஆண்டு | 12,600.00 | 13,150.00 | 13,700.00 | 14,250.00 | 14,800.00 |
| 3 ஆம் ஆண்டு | 12,700.00 | 13,275.00 | 13,850.00 | 14,425.00 | 15,000.00 |
| 4 ஆம் ஆண்டு | 12,800.00 | 13,400.00 | 14,000.00 | 14,600.00 | 15,200.00 |
| 5 ஆம் ஆண்டு | 12,900.00 | 13,525.00 | 14,150.00 | 14,775.00 | 15,400.00 |
| 6 ஆம் ஆண்டு | 13,000.00 | 13,650.00 | 14,300.00 | 14,950.00 | 15,600.00 |
| 7 ஆம் ஆண்டு | 13,100.00 | 13,775.00 | 14,450.00 | 15,125.00 | 15,800.00 |
| 8 ஆம் ஆண்டு | 13,200.00 | 13,900.00 | 14,600.00 | 15,300.00 | 16,000.00 |
| 9 ஆம் ஆண்டு | 13,300.00 | 14,025.00 | 14,750.00 | 15,475.00 | 16,200.00 |
| 10 ஆம் ஆண்டு | 13,400.00 | 14,150.00 | 14,900.00 | 14,650.00 | 16,400.00 |

EOG 01 - 0079/6

---

**சம்பளச் சபைகள் கட்டளைச்சட்டம்**

அறிவித்தல்

**சில்லறை, மொத்த விற்பனைத் தொழிலுக்கான சம்பளச்சபை**

சில்லறை, மொத்த விற்பனைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் விதிமுறைகளின் கீழ் ஆக்கப்பட்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள தீர்மானங்கள், கௌரவ தொழில் அமைச்சர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவெனஅக் கட்டளைச் சட்டத்தின் 29 (3) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத் தீர்மானங்கள் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**எம். பி. டி. யு. கே. மாபா பதிரண,**
செயலாளர்,
கைத்தொழில் அமைச்சு.

"மெஹெவரபியெச",
கைத்தொழில் அமைச்சு,
கொழும்பு 05.
2021, திசெம்பர் 30.

## அட்டவணை

*சில்லறை, மொத்த விற்பனைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1990 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதிய 599/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரமாகிய அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையில் விரிவாகக் குறித்துரைக்கப்பட்டுள்ளதும், காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டுள்ளதும், கடைசியாக 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதிய 2081/50 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலின் மூலம் மாற்றப்பட்டவையுமான தீர்மானங்கள் அவ்வட்டவணையில் பகுதி II ற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பகுதியை பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்பட வேண்டும்.*

### பாகம் II

### மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள விகிதம்

### நிரல் I

**வேலையாளரின் வகுப்பு**

**தரம் I** பண்டகசாலைப் பொறுப்பாளர், கணக்கு பதியுனர்கள். முகாமையாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள், மருந்தாளர்கள்

**தரம் II** தொலைபேசி இயக்குநர்கள், எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள், பேரேட்டு எழுதுவிளைஞர்கள், கணக்கு எழுதுவிளைஞர்கள், உதவிக் காசாளர்கள், செலவுக் கணக்கு எழுதுவிளைஞர்கள், சம்பள எழுதுவிளைஞர்கள், காசு இயந்திர இயக்குநர்கள், பற்றுச்சீட்டு எழுது விளைஞர்கள்.

**தரம் III** பற்றுச்சீட்டு சேகரிப்போர், விற்பனையாளரும் விற்பனைப்பெண்களும், செவ்வைபார்ப்போர்.

**தரம் IV** தொழிளாளர்கள், ஒப்படைப்பாளர்கள், கடைசிப்பந்திகள், பொதியிடுவோர்கள். செய்திப் பணியாளர்கள். கருமபீடப் பணியாளர்கள், மரந்துக் கலவையாளர்கள், ஏற்றி இறக்கும் தொழிலாளர்கள், பம்பிக் கவனிப்பாளர்கள், துவிச்சக்கரப் பணியாளர்கள்.

### நிரல் II

### மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள விகிதம்

### ஊழியர்களின் வகுப்பு

| ஊழிய ஆண்டு | தரம் I | தரம் II | தரம் III | தரம் IV |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 15,055.00 | 14,275.00 | 13,502.00 | 12,750.00 |
| 2 ஆம் ஆண்டு | 15,230.00 | 14,425.00 | 13,627.00 | 12,850.00 |
| 3 ஆம் ஆண்டு | 15,405.00 | 14,575.00 | 13,752.00 | 12,950.00 |
| 4 ஆம் ஆண்டு | 15,580.00 | 14,725.00 | 14,877.00 | 13,050.00 |
| 5 ஆம் ஆண்டு | 15,755.00 | 14,875.00 | 14,002.00 | 13,150.00 |
| 6 ஆம் ஆண்டு | 15,930.00 | 15,025.00 | 14,127.00 | |
| 7 ஆம் ஆண்டு | 16,105.00 | 15,175.00 | 14,252.00 | |
| 8 ஆம் ஆண்டு | 16,280.00 | 15,325.00 | 14,377.00 | |
| 9 ஆம் ஆண்டு | 16,455.00 | 15,475.00 | 14,502.00 | |
| 10 ஆம் ஆண்டு | 16,630.00 | 15,625.00 | 14,627.00 | |

EOG 01 - 0079/7

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.